பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 07 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சீனா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

- நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் விசாகப்பட்டினம் துறைமுகம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

- விமானங்களின் எரிபொருள் இயக்கும் கருவிகளின் செயல்பாட்டை விமான நிறுவனங்கள் பரிசோதிக்க வேண்டும் என்று விமானப் போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

- சிரியாவில் பழங்குடியின மக்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 89 பேர் உயிரிழந்தனர்.

- இங்கிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் வெற்றிக்கு ரவீந்திர ஜடேஜா மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சீனா சென்றுள்ள மத்திய அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

சீனாவின் **Tian Jin** நகரில் நடைபெற உள்ள **SCO** வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக திரு. ஜெய்சங்கர் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இந்தியா உறுதிமேற்கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

முன்னதாக சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi** உடன் பீஜிங்கில் திரு. ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

அப்போது இந்தியா – சீனா இடையேயான எல்லை தொடர்பான பிரச்சினை, மக்களுடன் கருத்துகள் பரிமாற்றம் உள்ளிட்டவை குறித்து விரிவாக தாம் ஆலோசனை நடத்தியதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், சீனாவின் **CPC** மத்திய குழுவின் சர்வதேச துறைக்கான அமைச்சர் திரு. **Liu Jianchao** உடன் ஆக்கப்பூர்வமான பேச்சுகளை நடத்தியதாகக் கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவு குறித்தும் உலக அளவில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் விசாகப்பட்டினம் துறைமுகம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினம் துறைமுகத்தில் 320 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

உலக அளவில் இந்தத் துறைமுகம் 19வது இடத்தில் உள்ளதாகவும், 92 ஆண்டுகளாக சிறப்பான செயல்பாட்டுடன் இயங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

சென்ற நிதியாண்டில் இந்த துறைமுகத்தில் இருந்து 8 கோடியே 20 லட்சம் மெட்ரிக் டன் அளவிலான சரக்குகள் கையாளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

விமானங்களின் எரிபொருள் இயக்கும் கருவிகளின் செயல்பாட்டை விமான நிறுவனங்கள் பரிசோதிக்க வேண்டும் என்று விமானப் போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

போயிங்-787, 737 விமானங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான விமானங்களின் எரிபொருள் செயல்பாட்டு கருவிகளை வரும் 21ஆம் தேதிக்குள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த இயக்குநரகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

பீஹாரில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டதில் இதுவரை 12 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

7 கோடியே 90 லட்சம் வாக்காளர்களை ஆய்வு செய்ததில் 17 லட்சம் வாக்காளர்கள் பீஹார் மாநிலத்திற்கு வெளியே வசிப்பது தெரியவந்திருப்பதாக தேர்தல் ஆணைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் வாக்காளர்கள் இரண்டு இடங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்திருப்பதாக தெரியவந்துள்ளது.

முழுமையான பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 35 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள் என்று அம்மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்தியாவின் சுபான்சு சுக்லா உட்பட 4 பேர் டிராகன் விண்கலம் மூலம் இன்று பிற்பகல் 3 மணியளவில் பூமிக்கு திரும்ப உள்ளனர்.

18 நாட்களுக்குப் பின்னர், இந்திய நேரப்படி நேற்று மாலை 4.35 மணியளவில் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து டிராகன் விண்கலம் பிரிந்து அவர்கள் பயணத்தை தொடங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்பகுதியை சுபான்சு சுக்லா உள்ளிட்டோர் வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒடிசாவில் **Ravenshaw** பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

**Ravenshaw** மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மேம்பாட்டு பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

ஒடிசா மாநிலத்தின் புகழ்பெற்ற கவிஞரான **Adikabi Sarala Das**-ன் பிறந்தநாள் கொண்டாட்டங்களிலும் குடியரசுத்தலைவர் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

பசுமை எரிசக்தி மாற்றுப் பயணத்தில் இந்தியா 50 சதவீத இலக்கை எட்டியிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த நிறுவுதிறன் மின்சார உற்பத்தியில் மரபுசாரா எரிபொருள் ஆதாரங்களில் இருந்து 50 சதவீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இது திட்டமிடப்பட்ட இலக்கை விட 5 ஆண்டுகள் முன்கூட்டியே அடைவதாகும் என்றும் மத்திய அரசின் தகவல் தெரிவிக்கிறது.

பருவநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கிய நாட்டின் உறுதிப்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல்கல் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருவாரூர் அருகே பள்ளி குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக காவல்துறையினர் கைது செய்ய வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உலகில் வேறு எங்கும் நடைபெறாத கொடூரம் இந்த ஆட்சியில் நடைபெற்றிருப்பதாகவும், இது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், குறிப்பிட்டுள்ளார்.

வேங்கைவயல் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த சம்பவத்தில் இதுவரை உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் அரங்கேறி வருவதற்கு தமது கண்டனத்தையும் அவர் தெரிவித்துள்ளார்.

மாநில அரசு வழக்கம்போல இந்தப் பிரச்சினையை திசை திருப்பாமல் காவல்துறையினரும், அதற்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

கனடாவின் டொராண்டே நகரில் ரத யாத்திரையின்போது இடையூறு ஏற்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இந்த விவகாரம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கனடா அரசு அதிகாரிகளை இந்தியா கேட்டுக்கொண்டிருப்பதாக கூறினார்.

<<<<>>>>

சிரியாவின் **Sweida** மாகாணத்தில் பழங்குடியின மக்களுக்கும், தீவிரவாத குழுக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் கடந்த 2 நாட்களில் 89 பேர் உயிரிழந்தனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இருதரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறும் நிலையிலும் மோதல் தொடர்ந்து நீடிப்பதாகவும், அந்த மாகாணத்தின் மேற்குப் பகுதியில் வெடிகுண்டு சத்தங்கள் நீடிப்பதாகவும் ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பகுதியில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

<<<<>>>>

நாட்டின் வடமேற்கு, கிழக்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கர், ராஜஸ்தான், ஒடிசா, ஜார்கண்ட் மாநிலங்களிலும், மேற்குவங்கத்தின் கங்கைக் கரையோரப் பகுதிகளிலும் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக தெலங்கானா, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர்கள் கூட்டத்தை தில்லியில் நாளை மத்திய அரசு கூட்டியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு ஆகியோர் மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

அப்போது இரு மாநிலங்களுக்கும் இடையேயான நதிநீர்ப் பங்கீடு குறித்து ஆலோனை மேற்கொள்ளப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா மேற்கொண்ட முயற்சி வீணானது.

லார்ட்சில் நடைபெற்ற இப்போட்டியின் 5வது நாளான நேற்று இரண்டாவது இன்னிங்சில் இந்திய அணி வெற்றி பெற 193 ரன் தேவை என்ற நிலையில், 170 ரன்னுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

ஜடேஜா 61 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் வைஷாலி, ஹரிகா துரோனவள்ளி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3வது சுற்று ஆட்டங்களில் ஹரிகா, கிரீஸ் நாட்டின் **Stavroula**-வையும், வைஷாலி அமெரிக்காவின் **Carissa Yip**-யும் வென்றனர்.

<<<<>>>>

இந்தியா – உஸ்பெகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 20 வயதுக்கு உட்பட்டோருக்கான நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டி டிரா ஆனது. தாஸ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

வரும் 20ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென், பி.வி. சிந்து, ரங்கி ரெட்டி, சிராக் ஷெட்டி உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3வது நாளான நேற்று இந்தியா 2வது இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்துள்ளது.

**Beckenham**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 540 ரன் எடுத்துள்ளது.

இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 439 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>